செ.வெ.எண்: 26 நாள்: 15.02.2021

**கரூர் மாவட்டம்**

**மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நடத்தப்படவுள்ள தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் ஆர்வமுடையோர் கலந்துகொண்டு பயன்பெறலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சு.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித்தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலத்தின் மூலம் தனியார் துறை வேலைவாய்ப்புகள் நடத்தப்படுகின்றது.

அதனடிப்படையில், கரூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலத்தின் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 20.02.2021 அன்று காலை 9.00 மணியளவில் வெண்ணமலையில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளகத்தில் நடத்தப்படவுள்ளது. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் இம்முகாமினைத் துவக்கி வைக்க உள்ளார்கள்.

இம்முகாமில் 10-ம் வகுப்பு, 12-ம் வகுப்பு, ஐடிஐ, டிப்ளமோ, கணினிப்பயிற்சி மற்றும் பட்டப்படிப்பு முடித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தங்களின் கல்வி சான்றிதழ்கள் மற்றும் சுயவிவரக் குறிப்புகளுடன் கலந்து கொள்ளவேண்டும்.

வேலைவாய்ப்பில் பங்குபெற விரும்பும் தனியார் துறை நிறுவனங்களும், வேலை நாடுபவர்களும் www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெறுபவர்களுக்கு அவர்களது வேலைவாய்ப்பு பதிவுமூப்பு ரத்து செய்யப்படமாட்டாது. இம்முகாமில் கலந்து கொள்ளும் அனைவரும் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியை பின்பற்றி கலந்துகொள்ள வேண்டும்.

ஆர்வமுடைய இளைஞர்கள் இந்த அரிய வாய்ப்பினை முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**